# செங்கோட்டை நகர்மன்றம்

## செங்கோட்டை நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் 27–04–2022

## அன்று காலை 11.00 மணிக்கு நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

தலைமை : திருமதி.ஆர்.ராமலட்சுமி நகர்மன்றத் தலைவர் அவர்கள்

முன்னிலை : திரு.சு.நவநீதிக் கிருஷ்ணன் நகர்மன்றத் துணைத் தலைவர் அவர்கள்

முன்னிலை : திரு.ம.இளவரசன் பி.காம்., ஆணையாளர் அவர்கள்

**மன்றப் பொருள் 01 :**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 748/2008/குவ2 நாள் 21-09-2009ன் **படி** நகராட்சி பகுதியில் புதிதாக குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு சாலை பராமரிப்பு கட்ட**ணம்** நிர்ணயம் செய்யப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் முந்தைய ஆண்டு தொகையுடன் 5 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள**து. அதன்** படி 2022-2023ம் ஆண்டிற்கு சாலை பராமரிப்பு கட்டணமாக கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகையினை 01-04-2022 முதல் 31-03-2023 வரை வசூல் செய்து புதிய இணைப்பு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| விபரம் | கருங்கல் ஜல்லி சாலை | | தார் சாலை | | சிமெண்ட் சாலை | |
|---|---|---|---|---|---|---|
| | முந்தைய ஆண்டு கட்டணம் | 2022-2023ம் ஆண்டிற்கான கட்டணம் | முந்தைய ஆண்டு கட்டணம் | 2022-2023ம் ஆண்டிற்கான கட்டணம் | முந்தைய ஆண்டு கட்டணம் | 2022-2023ம் ஆண்டிற்கான கட்டணம் |
| குடிநீர் வழங்கும் பிரதான குழாயில் இருந்து 0 முதல் 30 மீட்டர் தொலைவு உள்ள குடிநிருப்புகளுக்கு | ரூ,1887 | ரூ.1981 | ரூ,4042 | ரூ.4244 | ரூ,4701 | ரூ.4936 |
| குடிநீர் வழங்கும் பிரதான குழாயில் இருந்து 30 முதல் 90 மீட்டர் தொலைவு உள்ள குடிநிருப்புகளுக்கு | ரூ.2963 | ரூ.3111 | ரூ.5119 | ரூ.5375 | ரூ.5746 | ரூ.6033 |

(ந.க.எண்; 1009/2005/இ1)
அலுலகக் குறிப்பு ;

1. 2022–202**3ஆம் ஆண்டு வழங்கப்படும்** புதிய குடிநீர் இணைப்புகளுக்கு சாலை பராமரிப்பு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதனை மன்றம் அனுமதி**க்கலாம்.**

### தீர்மானம்:

மன்ற அனுமதி வழங்கப்படுகிறது.

**<u>மன்றப் பொருள் 02 :</u>**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–2022ன் கீழ் செங்கோட்டை நகராட்சி கே.சி.ரோடு பகுதியிலுள்ள வாரச்சந்தை மறு சீரமைப்பு மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. வாரச்சந்தையிலுள்ள பழைய கட்டிடங்கள், செப்டிக் டேங்க், மற்றும் கூடாரங்கள் ஆகியவற்றை இடித்து அப்புறப்படுத்திய பின்னரே மறுசீரமைப்பு பணி மேற்கொள்ள இயலும் எனவே, மேற்படி பகுதியிலுள்ள பழைய கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த ரூ.3,50,000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசிய கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கேரியமைக்கும், மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் :

மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் 03 :</u>**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–2022ன் கீழ் செங்கோட்டை நகராட்சி பம்புஹவுஸ் ரோடு பகுதியிலுள்ள தினசரி சந்தையினை மறு சீரமைப்பு பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது தினசரி சந்தையிலுள்ள பழைய கட்டிடங்கள் மற்றும் கூடாரங்கள் இடித்து அப்புறப்படுத்திய பின்னரே மறுசீரமைப்பு பணி மேற்கொள்ள இயலும் எனவே, மேற்படி பகுதியிலுள்ள பழைய கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த ரூ.1,70,000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசிய கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கேரியமைக்கும், மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் :

மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் 04 :</u>**

செங்கோட்டை நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் TN76AA 1237ற்கு 13.03.2021ம் தேதி 224310 கிலோ மீட்டரில் புதிய இஞ்சின் ஆயில் மாற்றப்பட்டு வாகனம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது 06.04.2022ம் தேதியில் 20870 கிலோ மீட்டர் இயக்கப்பட்டுள்ளதால் வாகனத்தை திருநெல்வேலி டெரிக் நிறுவன பணிமனை ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி வாகனத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்ட வேண்டும் என்வும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.50827/– ஆகம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது மேற்படி வாகனத்தில் டெரிக் நிறுவனம், திருநெல்வேலி மூலம் பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் :

மன்றம் அனுமதிக்கப்பட்டது.

.

**<u>மன்றப் பொருள் 05 :</u>**

செங்கோட்டை நகராட்சியின் அனைத்து வார்டுகளிலும் மொத்தம் 113 எண்ணம் அடிபம்புகள் உள்ளன தற்போது இந்நகராட்சியில் அடிபம்புகளுக்கான உபகரணங்கள் இருப்பில் இல்லை. எனவே, அடிபம்புகளுக்கு தேவையான உபகரணங்கள் கீழ்காணும் விபரப்படி தேவைப்படுகிறது.

| வ.எண் | உபகரணங்களின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 32mm GI Pipe 3 Meter Length | 300 |
| 2. | 32mm GI Coupler | 300 |
| 3. | Connecting rod Meter Length | 300 |
| 4. | Cylindrical Assembly | 25 |
| 5. | Upper Valve Assembly | 25 |
| 6. | Lower Valve Assembly | 25 |
| 7. | Water Tank | 20 |

| | | |
|---|---|---|
| 8. | Sealing Ring | 100 |
| 9. | Flange Bolt Unit (M 12 x40 x BOH with double nut | 300 |
| 10. | M10 x 40HT BOH | 100 |

குடிநீர் அவசர அவசியம் கருதி மேற்காணும் பொருட்களை டான்சி நிறுவனம் மூலம் வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.8.00 இலட்சம் குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசிய கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று டான்சி நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் :

மன்ற அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 06 :**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 29280/2020/IT, நாள்.31.03.2022ன்படி இந்நகராட்சிக்கான UTIS(Urban Tree Information System payment of Bandwidth cost of 6 months periods) தரைதள இணையதள சேவைகட்டணம் 01.07.2021 முதல் 30.09.2021 வரை ரூ.48295/– மற்றும் 01.10.2021 முதல் 31.12.2021 வரை ரூ.48295/– மொத்தம் ரூ.96590/– பி.எஸ்.என்.எல் நிறுவனத்திற்கு செலுத்திட தெரிவிக்கப்பட்டதின்படி மேற்படி தொகையினை செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு.

மேலும் 01.01.2022 முதல் 31.03.2022 வரை ரூ.48295/– மற்றும் நடப்பாண்டிற்கு 01.04.2022 முதல் 31.03.2023 வரை 12 மாதங்களுக்கு ரூ.193180/– ஆகமொத்தம் ரூ.338065/– எதிர்பார்க்கப்படும் உத்தேச கேட்புக்கான தொகை செலுத்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.286/2022/சி1)
அலுவலககுறிப்பு ;

1. மேற்படி தொகையினை செலுத்திட மன்றம் அனுமதிவழங்கலாம்.
2. எதிர்நோக்கப்படும் உத்தேச கேட்புதொகை உட்பட ரூ.3,38,065/– வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் :

மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 07 :**

செங்கோட்டை நகராட்சி Micro Compost Centre Map மற்றும் நகராட்சி வார்டில் உள்ள மூன்று MCC Map யின் அமைவிடத்தினை ஒரே மேப்பில் தயார் செய்து SBM குழுவிற்கு மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்திலும் ஒப்படைப்பு செய்தவகைக்கு ரூ.2200 செலவினத் தொகை, கோவிட் விழிப்புணர்வு வகைக்கு பிளக்ஸ் போர்டு தயார் செய்தமைக்கு ரூ.800 மற்றும் இந்நகராட்சி City Sanitation Action Plan பணிக்காக Boundary Map, Land Use Map, Sewage Map ஆகிய 3 மேப்களும் தயார் செய்து நகரராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்தில் ஒப்படைத்தமைக்கு செலவினம் ரூ.1800 ஆக மொத்தம் ரூ.4800 தொகையினை சுகாதார ஆய்வாளர் திரு.பழனிச்சாமி அவர்களால் செலவு செய்தமைக்கு மேற்காணும் தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்:268/ 2020/ எச்1)

அலுவலகக் குறிப்பு ;

1. ரூ.4800 தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் செலவுத் தொகையினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் :

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 08 :**

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதார வாகனம் TN76P8356 (Lorry) டயர் 25–03–2017ல் வாங்கப்பட்டு நான்கு வருடங்கள் மேலாகி விட்டதால் டயர் பட்டன் இல்லாமல் அடிக்கடிப பஞ்சர் ஆகிவருவதாலும், பொது சுகாதாரப் பணியினை கருத்திற்கொண்டு மேற்கண்ட வாகனத்திற்கு புதிதாக 6 டயர்கள் மாற்றம் செய்திட உள்ளூர் விலைப்புள்ளி அறிவிப்பு வெளியிடுவதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவினத்தினை வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண் ; 804/2020/எச்1

அலுவலகக் குறிப்பு ;

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் :

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 09 :**

15வது மத்திய நிதிக்குழு மானியம் 2021/2022 Tied நிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகம் அருகில் உள்ள 8.00 லட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, பம்பு ஹவுஸ் சாலையிலுள்ள தலைமை நீரேற்று நிலையம் ஆகிய முன்று பகுதிகளிலும் திரவ குளோரின் Plant அமைப்பதற்கு ரூ,16.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது, மேற்படி பணியினை மேற்கண்ட திட்டத்தின் கீழ் செயல்படுத்திட மன்றத்தின் அனுமதிக்கு,

அலுவலகக் குறிப்பு ;

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்றமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் :

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 10 :**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்து, அரசாணை (நிலை) எண்.52. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.490032/2012/ஆர்1 நாள்.01.04.2022 கடிதத்தின் படி 01–04–2022 முதல் சொத்து வரி பொது சீராய்வு மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி, சொத்துவரி சீராய்வு அறிக்கையினை பொது மக்களுக்கு தெரிவிக்கும் வகையில் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, தென்காசி அலுவலகம் மூலம் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு Express Publication (Madurai) Private Limited நிறுவனத்திற்கு ரூ.36,603/- தொகையினை வழங்கிடவும், பொது சீராய்வு மேற்கொள்ள சுயமதிப்பீட்டு படிவம் அச்சுப் பணி மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கும், மற்றும் இதர செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண் :274/2022/அ1

அலவலகக் குறிப்பு :

1. Express Publication (Madurai) Private Limited நிறுவனத்திற்கு ரூ.36,603/- தொகையினை வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. சுயமதிப்பீடு படிவம் அச்சு பணி மேற்கொள்வதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் :

மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 11 :**

தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட உயர்மட்டக் குழு கூட்டத்திற்கு தணிக்கை அறிக்கைகள் தயார் செய்து 10 எண்ணம் புத்தகம் பைண்டிங் செய்தமைக்கு செலவினம் ரூ.1740, சொத்துவரி பொது சீராய்விற்கான முதன்மை கையேடு பிரதி எடுத்து 24 வார்டுகளுக்கும் புத்தகம் பைண்டிங் தயார் செய்தமைக்கு கட்டணம் ரூ.1700/–,11–04–2022ம் தேதிய மன்றப் பொருள் மற்றும் தணிக்கை அறிக்கை நகல் எடுத்தமைக்கு ரூ.1262/–, மற்றும் சொத்து வரி செலுத்திடக் கோரிய விளம்பர பிளக்ஸ் போர்டு தயார் செய்தமைக்கு ரூ.600/– ஆக மொத்தம் ரூ. 5302/– செலவுத் தொகை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண் :1665/2012/அ1

அலவலகக் குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் :

மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**மன்றப் பொருள் 12 :**

செங்கோட்டை நகராட்சி அலுவலகப் பணிக்காக 2022–2023ம் ஆண்டிற்கு தேவைப்படுகின்ற படிவங்கள், பதிவேடுகள், எழுது பொருட்கள் மற்றும் கணிணி சாதனங்கள் மற்றும் அவ்வப்போது தேவைக்கேற்ப அரசு அனுமதி பெற்றுள்ள கூட்டுறவு நிறுவனத்தில் கொள்முதல் செய்ய தகுதியான கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி / ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் ;902/2017/எச்1)

ஆலுவலகக் குறிப்பு ;

1. ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/– வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் :

மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் 13 :</u>**

இந்நகராட்சி உட்பட்ட 24 வார்டுகளில் தினம்தோறும் தூய்மை பணியயார்கள் மூலம் வீடுதோறும் சென்று மக்கும் குப்பை, மக்காத குப்பை எனத் தரம் பிரித்து வாங்கி, மக்கும் குப்பைகளை நகராட்சிப் பகுதியில் உள்ள மூன்று நுண்உர செயலாக்க மைத்தில் (MCC) அரைக்கப்பட்டு உரமாக்கப்படுகிறது. மக்காத குப்பைகள் LCV மற்றும் லாரி மூலம் நகராட்சி வளமீட்பு பூங்காவில் கலவை உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. அவ்வாறு தினம் தோறும் கலவை மக்காத குப்பைகள் தற்போது பரவலாக வாகனங்கள் செல்ல இயலாத நிலையிலும், பொது சுகாதார பணிக்கு தொய்வு ஏற்படு.த்க் கூடிய நிலையிலும் உள்ளதால், கலவை உரக்கிடங்கில் கொட்டப்படும் மக்காத குப்பைகளை (Mixed Non Biodegradable Waste) Hitachi இயந்திர வாகனம் மூலம் அப்புறப்படுத்திடுவதற்கு உள்ளூர் விலைப்புள்ளி கோருவதற்கும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/- க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண் ;1551/2021/எச்1

அலுவலகக் குறிப்பு ;

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் :

மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் 14 :</u>**

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதார வாகனம் TN76AM3422 (LCV) மற்றும் TN76AM3463(LCV) இரண்டு வண்டிகளுக்கும் பழுது பணிகள் மேற்கொண்டு உடன் தகுதிச் சான்று பெற இருப்பதால், மேற்காணும் இரண்டு வாகனங்களை உடன் பழுது பணிகள் மேற்கொள்ள அவசர அவசியம் கருதி தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைப்புள்ளி / ஒப்பந்தப்புள்ளி 06–04–2022ம் தேதி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. பெறப்ட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திள்.எஸ்.வி ஆட்டோ சர்வீஸ் சென்டர், தென்காசி ஏன்பவரது விலைப்புள்ளி விபரம் | ரூ.20,005/- |

| | | |
|---|---|---|
| 2 | திள்பொன் முருகன் ஆட்டோ மொபைல்ஸ், தென்காசி ஏன்பவரது விலைப்புள்ளி விபரம் | ரூ.23,091/– |

ந.க.எண் ; 804/2020/எச்1

அலுவலகக் குறிப்பு ;

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திள்.எஸ்.வி ஆட்டோ சா்வஸ் சென்டா், தென்காசி என்பவருடைய விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்கண்ட பணி அவசர அவசியம் கருதி உடன் மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் :

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 15 :**

15 வது மத்திய நிதிக்குழு மான்யம் 2020–2021 ன் கீழ் , கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 18.3.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 21.3.2022 அன்று திறக்கப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம்

| வ.எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர்மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி கே,சி ரோடு அம்மா உணவகம் அருகில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் காவலர் அறை மற்றும் பராமரிப்பு பணிகள் , புதிதாக வால்வு தொட்டிகள் அமைத்தல் | 12.10 | 1)திரு.எ.ஆறுமுகம்–ஒப்பந்த மதிப்பை விட5.5% அதிகம்<br>2)திரு.டி. ஆபேல் ஜெய சீலன்–ஒப்பந்த மதிப்பை விட4.85% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் ஒப்பந்த மதிப்பை விட கூடுதலாக உள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரா்களிடம் விலைக்குறைப்பு செய்ய கோரப்பட்டதில் கட்டுமான பொருட்களின் விலை அதிகமாக உள்ளதால் விலைகுறைப்பு

செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்கள்.எனவே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தப்புள்ளி மதிப்பை விட கூடுதலில் குறைவாக கொடுத்துள்ள திரு.டி.ஆபேல் ஜெயசீலன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு

திட்டப்பணிகள் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு விதி எண் : 2 பிரிவு–7 உட்பிரிவு – 2 ன்படி திரு. டி.ஆபேல் ஜெயசீலன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் பணியினை செய்ய அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் :

அலுவலக குறிப்பினை ஏற்று மன்ற அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 16 :**

15 வது மத்திய நிதிக்குழு மான்யம் 2021–2022 ன் கீழ் , கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 18.3.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 21.3.2022 அன்று திறக்கப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம்

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர்மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி பம்புஹவுஸ் சாலையிலுள்ள இந்திரா காலனி பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 10.50 | 1)திரு.எ.ஆறுமுகம்–ஒப்பந்த மதிப்பை விட4.56% அதிகம்<br>2)திரு.டி. ஆபேல் ஜெய சீலன்–ஒப்பந்த மதிப்பை விட5.92% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் ஒப்பந்த மதிப்பை விட கூடுதலாக உள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களிடம் விலைக்குறைப்பு செய்ய கோரப்பட்டதில் கட்டுமான பொருட்களின் விலை அதிகமாக உள்ளதால் விலைகுறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்கள்.எனவே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தப்புள்ளி மதிப்பை விட கூடுதலில் குறைவாக கொடுத்துள்ள திரு.ஆறுமுகம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு

திட்டப்பணிகள் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு விதி எண் : 2 பிரிவு–7 உட்பிரிவு – 2ன்படி திரு.ஆறுமுகம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் பணியினை செய்ய அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் :

அலுவலக குறிப்பினை ஏற்று மன்ற அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் 17 :**

செங்கோட்டை நகராட்சி சிறுமின்விசை பம்புகளுடைய ஆழ்துளைகுழாய் கிணறுகளில் மண் சரிவு மற்றும் வேர்பிடிப்பு ஏற்பட்டு பழுதான மின் மோட்டாரை வெளியே தூக்குதற்கு முடியாமல் உள்ளதை Lift Maker இயந்திரத்தைக் கொண்டு மின்மோட்டாரை கொண்டு வெளியேற்றலாம். மேலும் பழுதான மின்மோட்டார்களை Lift Maker இயந்திரம் மூலம் தூக்கப்பட வேண்டிய பகுதிகளின் விபரம்.

| | | |
|---|---|---|
| 1. வார்டு 13 காமாட்சி தெரு | – | 1 எண்ணம் |
| 2. காமராஜர் காலனி தெரு | – | 2 எண்ணம் |
| 3. பிள்ளையார் கோவில் தெரு | – | 1 எண்ணம் |
| 4. சாஸ்திரி தெரு | – | 1 எண்ணம் |
| 5. SRK தெரு | – | 1 எண்ணம் |
| 6. பெரியசாமி தெரு | – | 1 எண்ணம் |
| 7. புலவர் தெரு | – | 1 எண்ணம் |
| 8. தெற்கு ரதவீதி | – | 1 எண்ணம் |
| 9. அம்பேத்கார் தெரு | – | 1 எண்ணம் |
| | மொத்தம் | 10 எண்ணங்கள் |

மேலும் பொதுமக்களின் குடிநீர் அன்றாட பயன்பாட்டிற்கு தேவையாக உள்ளதால் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பழுதான மின்மோட்டார்களை Lift Maker இயந்திரம் மூலம் தூக்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் **ரூ.1,60,000/-** குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் :

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

**<u>மன்றப் பொருள் 18 :</u>**

திரு.எம்.இசக்கிதுரைபாண்டியன், 12வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் முன்மொழியும் தீர்மானம்

1) நான் வசிக்கும் பகுதியில் 12வது வார்டு பூத்திரம் தெருவில் பொது மக்களுக்கு குடிநீர் வசதி இல்லை ஆகையால் அப்பகுதியில் ஆழ்குழாய் அமைத்து சின்டக்ஸ் டேங் வைத்து அதன் மூலம் குடிநீர் வினியோகம் வசதி செய்து தர லேண்டி
2) மேற்படி வார்டில் மேற்படி பூத்திரம் தெருவில் உள்ள மின் கம்பங்களில் பல்புகள் இல்லாமல் மின் விளக்கு எரியாத நிலையில் அப்பகுதி முழுவதும் இருளில் மூழ்கி பொதுமக்கள் நடமாட இயலாத நிலை உள்ளது விஷசந்துக்கள் உலவுவதால் பொதுமக்கள் அச்சத்துடன் நடமாடி வருகிறார்கள் அடிக்கடி விஷ சந்தகளால் பாதிப்பும் அடைந்து வருகிறார்கள். ஆகையால் அனைத்து மின் கம்பங்களிலும் பல்புகள் பொருத்தி பொருத்தி வெளிச்சம் ஏற்படுத்தி தர வேண்டுகிறேன் அனைத்து மின்கம்பங்களிலும் வார்டு எண், வரிசை எண் எழுதிடவும் வேண்டி
3) K,C.ரோடு (12வது வார்டு) நகராட்சி வாட்டர் டேங் எதிர்புறம் தாடி கோனார் வீட்டிற்கு கீழ்புறம் உள்ள சிமெண்டு கல் பதித்த தென் வடல் ரோட்டில் பகுதிக்கு வடக்கே கழிவு நீர் ஒடைக் கட்டியும் பகுதிக்கு தெற்கே கழிவுநீர் ஒடை கட்டாமலும் உள்ளது. மேலும் மேற்படி ரோட்டில் மின் கம்பங்கள் ஏதுமில்லை ஆகையால் பகுதிக்கு தெற்கே உள்ள ரோட்டில் கழிவு நீர் ஒடை கட்டவும் மின்கம்பங்கள் அமைத்து தர வேண்டி.
4) மேற்படி கே.சி.ரோட்டில் (12வது வார்டு) செல்போன் டவர்க்கு கீழ்பக்கமும் குதிபைாய் சாகுல் ஹமீது வீட்டிற்கு மேற்புறமும் உள்ள பாதையில் சிமெண்டு ரோடு அமைக்கவும், கழிவு நீர் ஒடை கட்டவும் மின் கம்பங்கள் அமைக்க வேண்டி.

தீர்மானம் :

திரு.எம்.இசக்கிதுரை பாண்டியன் முன்மொழியும் தீர்மானத்தை திருமதி.மேரி வரி மொழிய தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**<u>மன்றப் பொருள் 19 :</u>**

திருமதி.எ.மேரி, 9வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் முன்மொழியும் தீர்மானம்

1) எனது 9வது வார்டில் சம்பவர் தெருவில் மின் கம்பத்தின் எண்.72 SS 3772 கம்பத்தில் லைட் இதுவரைக்கும் இல்லாத காரணத்தால் புதிதாக மின் விளக்கு எரிய ஏற்பாடு செய்து தர வேண்டி
2) கொத்தளம் தெருவில் சுமார் 20 ஆண்டு காலமாக சிமெண்ட் சாலை இல்லாத காரணத்தால் உடனடியாக சிமெண்ட் சாலை அமைத்து தர வேண்டி.
3) ஏ.ஜி துவக்கப்பள்ளி மேல் புரத்தில் உள்ள தெருவில் சிமெண்ட் சாலையும் அமைத்து தர வேண்டி.

4) மேற்படி ஏ.ஜி துவக்கப்பள்ளி மேல் புரம் உள்ள தெருவில் மின் கம்பம் எண்.*SS* 2,61ல் மின் விளக்கு எரிய ஏற்பாடு செய்து தர வேண்டி.
5) சாம்பவர் தெருவில் சுமார் 10 ஆண்டு காலமாக சிமெண்ட் சாலை இல்லாத காரணத்தால் உடனடியாக சிமெண்ட் சாலை அமைத்து தர வேண்டி.

தீர்மானம் :

திருமதி மேரி 9வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் முன் மொழியும் தீர்மானத்தை திரு.இசக்கிதுரை பாண்டியன் 12வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் வழி மொழிய தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்து.

<u>**மன்றப் பொருள் 20 :**</u>

திரு.கே.செண்பகராஜன், 24வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் முன்மொழியும் தீர்மானம்

1) 24ம் வார்டில் முத்தையா தெருவில் தண்ணீர் தொட்டி அருகே கூடுதல் குழாய் இணைப்பும் மற்றும் குடிநீர் விநியோகத்தில் தாமிரபரணி தண்ணீர் வினியோகிக்க வேண்டி
2) டாஸ்மாக் அருகே குப்பைகளை அப்புறப்படுத்தி அங்கே அறிவிப்பு பலகையும் வைக்க வேண்டி.
3) வைரவநாதன் தெருவில் உள்ள சிறிய பாலத்தை விரிவுடுத்தி உயரத்தை அதிகரித்து தர வேண்டி.
4) தெருவிளக்கு இல்லாத பகுதியில் புதிதாக தெருவிளக்கு அமைத்து தர வேண்டி

தீர்மானம் :

24வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் திரு.செண்பகராஜன் அவர்கள் முன்மொழியும் தீர்மானத்தை திரு.வேம்புராஜ் 22வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் வழி மொழிய தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.